RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22232

# அனார் கவிதைகளில் உவமைகள்

ஆ. கலைவாணி [அ, *], பா. உமாராணி

[அ] மொழிகள் துறை - தமிழ்ப்பிரிவு, கற்பகம் உயர்கல்விக்கழகம், கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# Anar Poems's Parables

A. Kalaivani [a, *], B. Umarani [a]

[a] Department of Languages – Tamil Wing, Karpagam Academy of Higher Education, Coimbatore-641021, Tamil Nadu, India

* Corresponding Author: kalaikani1025@gmail.com

Received: 27-02-2022
Revised: 06-04-2022
Accepted: 17-04-2022
Published: 30-04-2022

Check for updates

**ABSTRACT**

Literature produces human existence and identity. Every change that happens in the society, the basis for progress and the norms are revealed through literature in the creative world. The literature is promoting itself by putting forward theories such as structuralism, modernism, postmodernism, feminism and Dalitism. Women's writings, which have been suppressed in social life and art literature, are gaining intensity in many literary fields such as stories, poems, and essays. It can be seen that the voice of the modern woman is not the voice of the common sense of the male social system, but the voice of the woman. Not only in the society but also in the literary field, female characters have been a concept. Women take up poetry to free themselves from the domineering shackles of society, to fight for their rights, to express their feelings in print and to create aesthetics in subtle language. Some poets of the new generation consider the aesthetics of darkness as a further development and create poetry in that color. This article examines how parables are handled in Anar's poems, which have a new dimension in contemporary Tamil literature, and are undeniably important.

**Keywords:** Literature, Anar, Aesthetics, Parables, Poems, Female voice

## முன்னுரை

தமிழின் சங்க கால திணை இலக்கியம் தொடங்கி தற்காலத்திய நவீன இலக்கியம் வரையிலுமான பதிவுகள் வெவ்வேறு காலப்பகுதி சார்ந்த, சமூக அமைப்பு சார்ந்த, அனுபவம் சார்ந்த பெண்களின் பாடுபொருள்கள் ஆணின் பொதுக்குரலைக் காட்டிலும் பெண்குரல் தனித்துவ தன்னிலை குரல்களாகவே அமைந்திருக்கின்றன. தற்கால நவீன தமிழ் இலக்கியங்கள் என்னும் வகையில் கவிதை, சிறுகதை, புதினம் போன்ற இலக்கிய வடிவங்களில் பெண் சார்ந்த பெண் மைய படைப்புகள் வெகுவாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒரு படைப்புருவாக்கம் என்பது பருப்பொருள், அனுபவம், உலகியல், பண்பாடு, சூழல், மொழி, இடம் போன்றவற்றோடு தொடர்புடையது. இப்படியான படைப்பு இலக்கியத்தை அதன் அமைப்பு நிலையில் அறிந்து கொள்ள பெருந்துணை புரிவது உத்திகளே ஆகும். பெரும்பாலும் உத்திகள் கவிதைகளிலேயே அதிகம் காணப்படுகின்றன. பெரும்பான்மையான கவிஞர்கள் பயன்படுத்தப்படும் உத்திகளாக தொன்மம், உருவகம், உரையாடல், கதைத்தன்மை, இருண்மை, எள்ளல் படிமம், குறியீடு, உரைநடை, முரண், உவமை போன்றவைகளை குறிப்பிடலாம். கவிஞர் அனாரின் கவிதைகளில் உவமைகள் எப்படி கையாளப்பட்டுள்ளன என்பதை காணலாம்.

## அனார் - அறிமுகம்

'இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம்' என்ற இயற்பெயர் கொண்டு அனார் என்னும் புனைப்பெயரில் எழுதி வருகிறார். இவர் கிழக்கு இலங்கையை சேர்ந்தவர். 1990 களின் நடுப்பகுதியில் இருந்து கவிதை எழுதத் தொடங்கி சிறந்த எழுத்தாளராக கவி உலகில் வலம் வருபவர். அனார் கவிதைகள் பெரும்பாலும் தன்னுணர்ச்சி வெளிப்படுதலாகவே உள்ளன. எளிதில் உணர்த்திட முடியாத இருண்மைக் கவிதைகளையே அதிகம் படைத்திருக்கிறார். அனார் வாங்கிய விருதுகளே அவரின் கவிதைகள் வானுயிரத்தில் எட்டு வைத்து இருக்கிறது.

## அனாரின் படைப்புகள்

ஓவியம் வரையாத தூரிகை, எனக்குக் கவிதை முகம், உடல் பச்சை வானம், பெருங்கடல் போடுகிறேன், ஜின்னின் இரு தோகை போன்று இவரது கவிதை நூல்கள் பல இலக்கிய விருதுகளை பெற்றுள்ளன.

## உவமைகள்

அனாரின் படைப்புகள் முன்பனி, பின்பனி, வானம், பூமி, சூரியன், நிலா, நட்சத்திரம், கடல், காற்று, மழை, பாறை, வயல் என பலதரப்பட்ட காரணிகளை உவமைகளாக அமைத்து கவிதை புனையப்பட்டு இருக்கிறது. மேலும் அனார் தன்னுடைய கவிதைகளில் தனிமை குறித்தான பதிவையும், இழந்துவிட்ட பறவைகளையும் குறித்து அழகாக வருணிக்கிறார். தன்னுடைய உணர்வுகள் புதைக்கப்பட்டு, தனக்கான கனவுகளை சிதைத்து, தோல்விகளைச் சந்திக்கும் மனம், இளமை தொலைத்த நிலையில் தன் வாழ்தல் தொடர்பான மதிப்பீடுகளை மறுபரிசீலனை செய்கிறது. தன் உறவுகளாலேயே பெரும்பாலான பெண்களின் கனவுகள் தகர்க்கப்படுகின்றன என்பதை அழகாக உவமைப்படுத்துகிறார் அனார்.

“கிளிசலாகிக் கிடக்கிற

ஆத்மாவை

குரூரமாய் தைக்கும்

என் ரத்த பந்தங்களின்

பிடிவாதப் பிடியில்

அவதிபட்டும்

.......................

மௌனமாய்

மல்லுக்கட்டுகிறேன்” (Anar, 2004)

என துயரம் தோய்ந்த குரலில் பேசுகிறார். தான் இழந்த உரிமைகளையும், சமூகத்தில் பெண்ணுக்கான கட்டுப்பாடுகளையும், நிர்ப்பந்தங்களையும் நுட்பமாக விளக்கிச் செல்லும் கவிஞர் தான் விலக்கிவிட இயலாத வாழ்வை, ஒளியை விழுங்கிய மலட்டு இரவாக உவமைப்படுத்துகிறார். மதக் கலாச்சாரங்களும், சமூகத்தில் பெண் குறித்தான பொது நிலைப்பாடுகளாலும் இறுக்கமுறும் பெண்ணின் மனது இங்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

“பருவ காலங்களை சூடித் திரியும் கடற்கன்னி” என்னும் கவிதை கடற்கன்னியின் பேராற்றலை மொழிகின்றது. கன்னியின் அபரிமிதமான ஆற்றல் கொண்ட பாடல்களை பகலில் பாடி திரியும் படகோட்டியும், அப்பாடல் வழி தன் சொற்களை இறைத்த வண்ணம் இருக்கும் கடற்கன்னியையும், காட்சிப்படுத்தும் கவிஞர்,

“அபரிமிதமான ஆற்றலோடு தொடங்கும் பாடல்

................................

கடற்கன்னியின் சொற்கள்

குறையாமல் விளைந்த வண்ணமிருக்கின்றன

கரைமணலில் சிறுமிகளின்

மடிகொள்ளாத வெண்சிப்பிகளாக" (Anar, 2007)

என கடற்கன்னியின் சொற்களை வெண் சிற்பிகளாக காட்சிப்படுத்துகிறார். மேலும் கடற்கன்னியின் நடனத்தை உப்பின் காரநெடியாக உவமையாக்குகின்றார் அனார்.

பெண்ணை இயற்கையின் சாயலாகக் காணும் போக்கினை அனாரின் கவிதைகளில் அதிகமாகக் காணமுடிகிறது. மலையாக, காற்றாக, பறவையாக, பூ, சிலந்தி, செடிகொடிகள் எனப் பிரபஞ்சம் சார்ந்த பொருட்களை பெண்ணாகப் உவமையாக்கம் செய்வதைக் காணமுடிகிறத. தான் இயற்கையாக உருக்கொள்வதை,

"கனவும் விஷமுமான மந்திரம் நான்

காலங்களின் மீது

அறைகூவல் விடுக்கும்

சொல் ஒன்றின்

இடதும் வலதுமாவேன்

என்னை

எங்கு ஒளித்து வைக்க முடியும்"

என்ற கவிதையில் மொழிகின்றார் (Anar, 2017).

"நீலத்தேன்" என்னும் கவிதை பெண் வாழ்க்கைக்குள் நிகழும் துயரங்களைப் பேசுகிறது. குடும்பம் என்னும் அமைப்பின் காரணமாக தங்கள் கனவுகளைத் தொலைப்பதும், போர்ச் சூழல் காரணமாக வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்களுமாக இக்கவிதை நகர்கிறது. இந்நிலையில் பெண் தனக்கான கனவை மீட்டெடுக்க முனைவதை,

"கண்ணீர் துளிகளே தூக்கிப் பறக்கின்ற

மகரந்தக் கூடைக்குள்

மெழுகுவத்திகளை உருக்கவல்ல

வெம்மையான நினைவுகள் இருக்கக்கூடும்.

............................................

இரவுத் தேன்கூடு நிரம்பியிருக்கிறது

கனவில் இருந்தபடி

முதலாவது நீலத்தேனைப் பருகிடும் தருணம்

மலை நகர்ந்து போகிறது." (Anar, 2013)

எனத் தேன்கூட்டை உவமையாக்கி ஆதியில் பெண் கொண்டிருந்த விடுதலையை, துணைத்தேர்வு தொடங்கி அனைத்திலுமான விடுதலையைப் பெற்றது போன்றே மீண்டுமொரு விடுதலையைக் கோருகின்றார் அனார்.

"குறிஞ்சியின் தலைவி" என்னும் கவிதையில் குறிஞ்சியல் ஆதிகுடிகளின் வாழ்வியலை முன்வைத்து,

“பிடிபட்டு வளையில் திமிறும் உடும்பை கம்பினில் கட்டி...

தீயிலிட்டு, அதன் வெந்த இறைச்சியை மலைத்தேனில் தொட்டு

கணவன்மார்களுக்கு பரிமாறுகின்றாள் குறத்தி” (Anar, 2009)

என ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டினைக் கட்டுடைக்கின்றாள். மேலும் “ஆண்” பாலின முத்திரையாலேயே சமூகத்தை வெற்றிகொள்ள, கடந்தேற இயலும் என்ற பிற்போக்குத்தனத்திற்கு எதிராக,

“பெண் உடல் பூண்ட

முழு இயற்கை நான்

காற்றில் வசிப்பவன்

காலத்தைத் தோன்றச் செய்பவன்...

இன்றென்னைத் தீண்டலாம்” (Anar, 2009)

என மொழிகின்றார். ஆணை எதிர்ப்பவளாக பெண் இல்லை. அதன் அதிகாரத்தினை எதிர்க்கும் குரலாகவே இங்கு சுட்டப்படுகிறாள். காலம் காலமாக பெண்ணைக் கட்டமைத்த கொள்கையிலிருந்து விடுபட்டு எதிர்காலத்தை உணர்ந்த ஒருவனே இங்கு தேவை என குறிச்சியை உவமையாக்கி மொழிகின்றார்.

## முடிவுரை

தமிழில் பெண் மொழி தனக்கான இடத்தை கண்டறிந்துள்ளது என்பதை அனாரின் கவிதை வரிகள் நுட்பமாக வெளிப்படுத்துகின்றன. அழகும் செறிவும் கொண்டு இலக்கிய உலகில் புதிய சாரத்தை ஏற்றி இருப்பதை உணர முடிகிறது. பெண் சிக்கல்கள், வன்முறைகள், சமுதாய சிக்கல்கள் தொடங்கி போர் வரை அனாரின் கவிதைகள் பல்வேறு உவமைகள் கொண்டு எழுதப்பட்டிருப்பது அவரின் மொழி கையாளுமையையும் கூர்மையான அர்த்தங்களை தாங்கி புதுமையான சிந்தனை துணிவுடனும் வெளிப்பட்டு இருப்பதை இக்கட்டுரை வழி காண முடிகிறது.

## References

Anar, (2004) Oviyam Varaiyatha Thoorigai, Moondravathu Manithan Veliyedu, Colombo, Sri Lanka.

Anar, (2007) Enaku Kavithai Mugam, Kalachuvadu Pathippagam, Nagercoil, India

Anar, (2009) Udal Pachai Vanam, Kalachuvadu Pathippagam, Nagercoil, India

Anar, (2013) Perunkadal Podukiren, Kalachuvadu Pathippagam, Nagercoil, India

Anar, (2017) Jinnin Iru Thokai, Kalachuvadu Pathippagam, Nagercoil, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License